# மின்நிலா

நவம்பர் 2, 2020



engalblog.blogspot.com

எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...

இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...

engalblog@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.

Layout by : KGG :

============

ஆசிரியர்கள் :

B SRIRAM

K G GOUTHAMAN

KAYJEE

K G Y RAMAN

K S

மின்நிலா 023 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம் பக்கம் எண்

புளிக்காய்ச்சல் (அ) சாதம் கலந்தால் புளியோதரை:: ரமா ஸ்ரீநிவாசன் ரெஸிப்பி....2
கதை : மாய நோட்டு 2/4 - ஜீவி....6
கேள்வி பதில்கள்....12
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ....17
ஒத்தையா இரட்டையா? இதுவா அதுவா?:: ஸ்ரீராம்....19
கதம்பம் :: ஸ்ரீராம்....23
பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்....29
நேர்மறை செய்திகள்....34
மைசூர் - ஒரு மாமாங்கத்திற்கு முன்பு !....42

குறிப்பு :

நீல நிறத்தில் காணப்படும் தலைப்புகள் கொண்டவை இந்த மின்நிலா இதழில் மட்டும் வெளியிடப்படுபவை. மற்றவை அனைத்தும் சென்ற வார எங்கள் பிளாக் வலைப்பூவில் வெளியிடப்பட்டவை.

# புளிக்காய்ச்சல் (அ) சாதம் கலந்தால் புளியோதரை:: ரமா ஸ்ரீநிவாசன் ரெஸிப்பி

வேண்டிய பொருட்கள் :

புளி (பழையதாக இருந்தால் சுகம்) : ¼ கிலோ

(ஒரு மணி நேரம் புளியை இளம் சூடான தண்ணீரில் ஊற வைக்கவும்)




நல்லெண்ணை : ¼ லிட்டர்

மஞ்சள் பொடி : 3 டீஸ்பூன்கள்

கடுகு : 2 டீஸ்பூன்கள்

வெந்தயம் : 2 டீஸ்பூன்கள்

(நன்றாக எண்ணை விடாமல் வறுத்து பொடி செய்து கொள்ளவும்)

சிவப்பு மிளகாய் (குண்டு மிளகாய்

அதிக காரம் கொடுக்காது) : 8 - 10 மிளகாய்கள்

உப்பு : தேவைக்கேற்ப

க.பருப்பு : 2 டீஸ்பூன்கள்

கருவேப்பில்லை தழைகள் : 2 கொத்துகள்

செய்முறை :

முதலில் சிறிய ஸ்பூனால் 4 ஸ்பூன் ந.எண்ணையை வாணலியில் விட்டு நன்றாக சுட்ட பின், கடுகு, க.பருப்பு ஆகியவைகளை வறுத்துக் கொள்ளவும். பாதி வறு பட்ட பிறகு மிளகாயை சேர்த்தால், மிகவும் கலர் மாறாமல் இருக்கும். இவை யாவையும் இறக்கி தனியாக ஒரு கிண்ணத்தில் வைக்கவும். இப்போது ஒரு கொத்து கருவேப்பில்லையை உருவி நன்றாக எண்ணை வானலியில் சேர்த்து வறுக்கவும். அதையும் வறுத்தவைகளோடு சேர்த்து வைக்கவும்.

இப்போது, நன்றாக ஊறிய புளியை இரண்டு அல்லது மூன்று முறைகள் கை அழுந்த கரைத்து எண்ணை வானலியில் சேர்க்கவும். முதலில் ஊற வைத்த நீரை மட்டும் உபயோகிக்கவும். மேலும் நீர் சேர்த்தால் புளிக்காய்ச்சல் நீர்த்து விடும். வைத்திருக்கும் மஞ்சள் பொடியை சேர்க்கவும். அந்த கரைசலை நன்றாகக் கொதிக்க விடவும். அது நன்றாகக் கொதித்து கலர் சிறிது மாறும்போது மீதியிருக்கும் ந.எண்ணையைச் சேர்க்கவும். தேவையான உப்பை கலந்து, வெந்தயப் பொடியையும் சேர்க்கவும். இன்னொரு கொத்து கருவேப்பில்லையை கொத்தாக சேர்க்கவும். சல சலவென கொதிக்க விடவும். அடியில் பிடிக்காமல் சிறிது நேரத்திற்கு ஒரு முறை கிளறி விடவும். ஒரு பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் கொதித்த பின் தானாக சேர்த்த எண்ணை ஓரங்களில் பிரியத் துவங்கும். நன்றாக கொதிக்கும்போது நல்ல புளிக்காய்ச்சல் வாசம் வீட்டு வாசல் வரை மிதந்து வரும்.

இப்பொழுது, புளிக்காய்ச்சலை கீழை இறக்கி ஒரு எவர்சில்வர் சம்புடத்திற்கு மாற்றி விடவும். நான் வாணலியில் அதிக நேரம் வைப்பதில்லை.

இப்பொழுது, வறுத்து வைத்த கடுகு, க.பருப்பு மற்றும் கருவேப்பிலையை புளிக்காய்ச்சலுடன் சேர்த்து கலக்கவும்.

சிலர் வேர்க்கடலையை வறுத்து புளிக்காய்ச்சலுடன் சேர்ப்பார்கள். எங்கள் வீட்டில் நான் முந்திரி பருப்புகளை சிறிது சிறிதாக உடைத்து நன்றாக வறுத்து புளியோதரை கலக்கும்போது சாதத்துடன் சேர்ப்பேன். அவ்வாறு செய்தால், உண்ணும்போது மொறு மொறுவென்றிருக்கும். சிலர் சிறிது வெல்லம் சேர்ப்பார்கள். எங்கள் வீட்டில் அந்த வழக்கம் கிடையாது.



புளியோதரை கலக்கும்போது சாப்பிட்டு பார்த்து வேண்டுமானால் பொடி உப்பு சேர்த்துக் கொள்ளலாம். அதே போல் சிறிது ந.எண்ணையும் சேர்த்துக் கொள்ளலாம். எங்கள் வீட்டில் தனியா, மிளகு யாவற்றையும் வறுத்து பொடி செய்து சேர்க்கும் வழக்கம் கிடையாது.



நான் புளியோதரை கலக்கும் முன் நன்றாக சாதத்தை ஒரு பெரிய தாம்பாளத்தில் பரப்பி ஆற வைத்து விடுவேன். சாதம் பொல பொலவென ஆனதும் புளிக்காய்ச்சலைக் கலப்பேன். உங்கள் வசதிக்கேற்ப கலக்கவும்.

இதற்கு தொட்டுக் கொள்ள தளி வடாம், ஜவ்வரிசி வடாம் மற்றும் அப்பளம் பொரித்து வைப்பேன்.

நான் புளிக்காய்ச்சல் செய்யும்போதே சிறிது ஒதுக்கி ஒரு தனி டப்பாவில் போட்டு வைத்து விடுவேன். என் கணவரும் இரு பெண்களும் தயிர் சாதத்திற்கு தொட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். போன வாரம்தான் பெரியவளுக்கு ஒரு பிளாஸ்டிக்

டப்பாவில் நிரப்பி ஆரிசோனாவிற்கு அனுப்பி வைத்தேன். (அப்பொழுது எடுத்த புகைப்படங்கள்தான் மேலே காணப்படுபவை.)



நீங்களும் இந்த ஐயங்கார் புளியோதரையை செய்து பாருங்கள். பிரமாதமாக இருக்கும்.

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# கதை : மாய நோட்டு 2/4 - ஜீவி



கேஷ் கவுண்ட்டர் வந்ததும் டக்கென்று பேண்ட் பின் பாக்கெட்டிலிருந்த பர்ஸை எடுத்து முன்னாடியே ஏற்பாடுடன் பக்குவமாக மடித்து வைத்திருந்த ஐநூறு கொத்தை எடுத்து பில்லுடன் சேர்த்துக் கொடுத்தேன்.

கவுண்டரில் அமர்ந்திருந்தவருக்கு ஏகப்பட்ட அவசரம். இயந்திரம் மாதிரி நோட்டுகளை வாங்குவதும் பில் பார்த்து மீதிப் பணம் கொடுப்பதும் பில்லில் சீல் அடித்துக் கொடுப்பதுமாக இருந்தார். அந்த அவரசரத்திலும் நான் கொடுத்த நோட்டுகளை அசால்ட்டாக வாங்கியவர், அடுத்த நிமிடமே "ஐநூறு ஒன்று அதிகமாகக் கொடுத்திருக்கிறீர்களே! இந்தாருங்கள்.." என்று நான் கொடுத்த நோட்டுகளில் ஒன்றை என்னிடமே தந்து விட்டு, பில்லில் சீல் அடித்து இருநூறு ரூபாய் திருப்பிக் கொடுத்தார். மூன்று ஐநூறுக்கு நான்கு ஐநூறு கொடுத்து அதில் ஒன்றை திருப்பி வாங்கிக் கொண்ட அசட்டுத்தனத்தை என்னுள்ளேயே விழுங்கிக் கொண்டு சீலடித்த பில்லைக் காட்டி பையில் இட்ட பார்ஸல்களை வாங்கிக் கொண்டு கடைப் படி இறங்கி ரோடு பக்கம் வந்தேன். வெளி ட்யூப் லைட் வெளிச்சத்தில் கேஷ் கவுண்ட்டரில் கொடுத்த நோட்டைப் பார்த்தால், என் மூஞ்சி தொங்கிப் போனது. அட, ராமா! அந்த நெருப்பு சுட்ட நோட்டு என்னை விடவே விடாதா என்று எரிச்சலாக வந்தது.



வாழ்க்கையின் பாடங்கள் விநோதமானவை. எல்லா அழுத்தங்களையும் தாண்டி வருவது தான் வெற்றிக்கான புடம் போடுதலாம். எமர்ஸனோ நம்ம ஊர் ஜே.கே.யோ யார் சொன்னது என்று சட்டென்று நினைவுக்கு வரவில்லை. 'யாராயிருந்தால் என்ன, எவர் சொன்னார் என்பது முக்கியமில்லை; என்ன சொன்னார் என்பது தான் முக்கியம்' என்று இன்னொருவர் சொன்னது நினைவுக்கு வந்தது.

'இந்த சான்ஸ் போனால் என்ன, இந்த நோட்டை எப்படியாவது தள்ளி விட அடுத்த வழி என்னவென்று மனம் தீவிர ஆய்வில் சிக்கிக் கொண்டது.

"ஐயா.. பார்க்காதது மாதிரியே போறீங்களே! அஞ்சு ரூபா தர்மம் பண்ணி விட்டுத்தான் போங்களேன்..' என்ற குரல் வித்தியாசமாகப் பட்டு டக்கென்று நின்று விட்டேன்.

தரையில் விரித்த துண்டு; அதன் மேல் கொஞ்சம் சில்லரைக் காசுகள்.

சட்டென்று பொறி தட்டியது. 'இந்த பிச்சைக்காரன் துண்டில் அந்த நெருப்பு சுட்ட நோட்டைப் போட்டு விடலாமா?'. .. 'ஐய்யயோ.. ஐநூறு ரூபாயா?.. என்னதான் செல்லாத நோட்டு என்றாலும் ஐநூறு ரூபா தானம் அதிகபட்சம்' என்று புனர் ஆலோசனை தடுத்தது. எப்பப்பார்த்தாலும் என்னுள் இந்த ஆலோசனை-- புனர் ஆலோசனை யுத்தம் தான். சலித்துக் கொள்ளாமல் இரண்டு பக்கமும் காது கொடுப்பேன். இரண்டில் எதைத் தேர்ந்தெடுத்தாலும் தங்களுக்குள் சுணங்கிக் கொள்ளாமல் அடுத்த ஆலோசனை -- புனர் ஆலோசனைக்கு ரெண்டு பக்கமும் தயாராகி விடுவது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கும்.

"என்னய்யா, யோசிக்கிறீங்க?.. தர்மம் பண்ணலாம்ன்னு தீர்மானிச்சிட்டீங்கள்லே.. அப்புறம் என்ன தயக்கம்?"

அவன் பிச்சைக்காரன் போல எனக்குத் தோன்றவில்லை. வேண்டுமென்றே போகிற வருகிறவர்களை.... 'ஏதாவது candid camera டிவி ஷோவாக இருக்குமோ' என்று சுற்று முற்றும் பார்த்தேன்.. அதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.

"என்ன பாக்குறீங்க?.." என்றான்.

என்னத்தைச் சொல்வது என்று தெரியாமல் விழித்தேன்... இவனோடு என்ன பேச்சு கொடுத்துக் கொண்டு?.. டக்கென்று கடந்து விடலாமா என்ற எண்ணம் என்னை ஆட்கொண்டது.

"ஒரு அஞ்சு ரூபா கொடுக்கறத்துக்கு என்ன யோசனை பாருங்க.." என்றான் அவன். உண்மையிலேயே அவன் அப்படிச் சொன்னது தான் என்னை வழிநடத்தியது போல உள்ளுணர்வில் ஒரு கிளர்ச்சி.

அனிச்சை செயலாய் என் கை பேண்ட் பாக்கெட்டுக்குப் போய் பர்ஸை எடுத்தது.. ஐந்து ரூபாய் நோட்டு இல்லை; பத்தாய்த் தான் இருந்தது. அதில் ஒரு நோட்டை எடுக்கும் பொழுது பர்ஸிலிருந்து இன்னொரு நோட்டு நழுவி அவன் தரையில் விரித்திருந்த துணியில் விழுந்தது.

நான் சுதாரிக்கும் முன் துணியில் விழுந்த நோட்டை அவன் பார்த்து விட்டான் போலும்.. "அட ஐநூறு!.." என்ற வியப்புடன் அவன் விழிகள் விரிந்தன... அந்த நோட்டை குனிந்து எடுத்தான். அடுத்த வினாடியே "தர்மம் என்றால் பத்து ரூபாயே அதிகம்.. எனக்கு அது போதும்.. இதை நீங்களே வைச்சிக்கங்க.." என்று தன் கைப்பட்ட ஐந்நூறு ரூபாய் நோட்டை என்னை நோக்கி நீட்டினான். மேலோட்டமான பார்வைக்கே நெருப்பு சுட்ட நோட்டு அது என்று எனக்குத் தெரிந்து விட்டது.. என்னை அறியாமல் என்னை விட்டுப் போயும் திருப்பித் திருப்பி என்னிடமே வருகிறதே அது என்று எனக்கு ஆயாசமாக இருந்தது. இந்தத் தடவை இந்த பிச்சைக்காரன் 'நீங்களே வைச்சுக்கங்க' என்று ஏதோ அவன் எனக்குக் கொடுக்கிற மாதிரி... 'அந்த' ஐநூறை என்னிடமே கொடுத்து விட்டான். பர்ஸிலிருந்து எடுத்த பத்து ரூபாயை துணியில் போட நான் எத்தனிக்கும் போது, பதறுகிற மாதிரி அவன் சொன்னான்.. "வேணாம், வேணாம்.. சாயரட்சைக்கு முதல் தர்மம்.. நீங்க தான் போணி பண்ணியிருக்கீங்க.. கையிலேயே கொடுத்திடுங்க.." என்று கேட்டு வாங்கிக் கொண்டான்.

"முதல் தர்மமா?.. அப்போ துணிலே கிடக்கற காசெல்லாம்?;"

"என்னது தான். என் காசு தான்.. என்ன செய்யறது?.. மத்தவங்க போடறதுக்கு நானே போட்டுக்கிட்டு வழிகாட்ட வேண்டியிருக்கு.." என்றான். சரியான ஆளாய் இருப்பான் போலிருக்கே....

எனக்கு அவனைப் பிடித்துப் போய் விட்டது. அதைத் தெரியப் படுத்தும் விதமாக லேசாகப் புன்னகைத்தேன்..

அவன் சிரித்ததும் அழகாய்த் தான் இருந்தது. "இதோ பாருங்க.. நீங்க கொடுத்த காசை உங்களுக்கு நேரேயே என்ன செய்கிறேன், பாருங்க.." என்று சொல்லி விட்டு அடுத்த தப்படியில் இருந்த டீக்கடைக்கு விரைந்தான்.

'என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்.. அந்த நெருப்பு சுட்ட நோட்டு தானாக வலிய அவன் துண்டில் விழுந்தும் என்னிடமே திருப்பி வந்து விட்டதே!' என்ற எண்ணமே என் மனசில் வண்டாய் குடைந்து கொண்டிருந்தது.

நான் கொடுத்த பத்து ரூபாய் நோட்டை டீக்கடைக்காரரிடம் கொடுத்து விட்டு திரும்பி என்னைப் பார்த்து அவன் கையசைப்பது தெரிந்தது.

நானும் அனிச்சையாய் அவனைப் பார்த்து கையசைத்து விட்டு நகர்ந்தேன். ஒரு பிச்சைக்காரனும் நானும் கையசைப்புகளைப் பகிர்ந்து கொள்வதை ரோடில் போகிற ஒரு ஆள் நின்று நிதானித்து பார்த்து விட்டு நகர்ந்தான். 'என்ன ஜென்மங்கள் இதுகள்!' என்று நினைத்திருப்பானோ?..

தெருவின் கோடியில் கோயில் கோபுரம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்த ஷணத்தில் பேசாமல் கோயில் உண்டியலில் 'அந்த' ஐநூறைப் போட்டு விடலாமா என்று லேசான கீற்று போல சிந்தனை எழுந்ததும் 'என்ன இருந்தாலும் இது செல்லாத நோட்டு; இருக்கிற பாவம் போதாதா, இதை வேறு உண்டியலில் போட்டு இன்னும் சேர்த்துக் கொள்ள வேண்டுமா?' என்று மாற்றுச் சிந்தனை ஒரே போடாகப் போட்டு என்னை அடக்கி விட்டது. பாண்ட் பாக்கெட்டில் நுழைந்து பர்ஸைத் தொட்ட கையை வெடுக்கென்று வெளியே இழுத்துக் கொண்டேன்.

சன்னதித் தெருவிலேயே ஜானு கேட்ட வெற்றிலையை வாங்கி கொண்டேன். பக்கத்து நாட்டு மருந்து கடையில் ஜாதிக்காய் பாக்கெட் ஒன்று வாங்கிக் கொண்டேன். ஜாதிக்காயை சின்னச் சின்ன துண்டுகளாக்கி அப்பப்போ வாயில் அதக்கி கொண்டிருப்பது மனசுக்குப் பிடித்த ஒரு பழக்கமாகவே ஆகிப் போய்விட்டது.. வெற்றிலையும் ஜாதிக்காயும் சில்லறை செலவுகள் ஆகையால் அந்த நோட்டை வெளியே எடுக்கவே வழியில்லாது போய் விட்டது.

வீடு படியேறி வெளி வாசலில் செருப்பைக் கழட்டி விடும் போதே ஜானகி வாசலுக்கு வந்து விட்டாள். "எங்கேயாவது போனீங்கன்னா, இன்ன இடத்துக்குப் போறேனுட்டு சொல்லிண்டு போக மாட்டீங்களா?.. போய் எவ்வளவு நேரமாச்சுன்னு நா கவலைலே உக்காந்திருக்கேன்.." என்று கடுகடுத்தாள்.

தோளில் தொங்கிக் கொண்டிருந்த ஜோல்னாப் பையைப் பார்த்ததும் "இந்த வெயிட் வேறையா?.." என்று லேசான புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள். அந்தப் புன்னகையில் ஒரு சந்தோஷம் பளிச்சிட்டது என் கழுகுக் கண்களுக்குத் தப்பவில்லை. நடு ஹாலிலேயே பையின் உள்ளே இருந்த பார்ஸல்களைப் பார்த்த சந்தோஷத்தில், "என்னன்னா.. முரளி கடைக்குப் போயிருந்தேளா?" என்று மலர்ந்தாள்.

அந்த நெருப்பு சுட்ட நோட்டு சரித்திரத்தை இவளிடம் சொல்லலாமா என்று தோன்றியது.. 'ஏற்கனவே அவள் பார்வையில் இருக்கும் இளிச்சவாயன் அந்தஸ்த்தை இன்னும் கூட்டிக் கொள்வானேன்?' என்று பேசாமல் இருந்து விட்டேன். கடைத்தெருவில் அந்த செல்லா நோட்டை கை கழுவுகிறேன் பேர்வழி என்று ஒரு ரவுண்ட் அடித்ததும் மட்டுமல்லால் ஆயிரத்து நானூறு ரூபாய் செலவானது தான் நெட் ரிசல்ட் என்று உறைத்தது..

இத்தனை அயர்ச்சிக்கும் நடுவே 'நோட்டோடு நோட்டாக பதுக்கி வைத்து விட்டால் இதற்கென்று தனியே பிரயத்தனப்படாமல் என்னை அறியாமலேயே யாருக்காவது கொடுத்து விடுவேன்' என்ற அசாத்திய நம்பிக்கை இருந்தது தான் விசேஷம்.

பீரோ லாக்கரைத் திறந்து பிளாஸ்டிக் டப்பாவுக்குள் மற்ற ஐநூறுகளுக்கு நடுவில் 'அதையும்' செருகி வைத்தேன்.

"காஜூ பிரமாதம்ன்னா... எப்படித்தான் இவ்வளவு டேஸ்ட்டா செய்யறான்னு தெரிலே.. ?" என்று ஹால் பக்கமிருந்து ஜானகியின் குரல் கேட்டது.

'எல்லாக் கவலையும் எனக்குத் தான் போலிருக்கு. ஜானு மாதிரி எல்லாத்தையும் அனுபவித்து சந்தோஷிக்க எனக்கு ஏன் தெரிவதில்லை?' என்று யோசனை ஓடியது. 'ரொம்ப யோசிச்சையானா இதுவே இன்னொரு கவலையாகி உன்னை அரிக்க ஆரம்பித்து விடும்' என்று புனர் யோசனை ஜாக்கிரதைபடுத்த 'இயல்பாகத் தானே இருக்கிறேன்' என்று என்னை நானே உற்சாகப்படுத்திக் கொண்டு ஹாலுக்கு வந்தேன்.

"அது என்ன எப்பப் பாத்தாலும் ஒரு யோசனை?" என்று ஜானு கண்ணைச் சாய்த்து என்னை ஆராய்கிற மாதிரி பார்த்தாள். அவள் பார்வையே ஆயிரம் சேதி சொன்னது. எனக்கு ரொம்ப ரொம்ப நெருக்கமாக வந்து, இடது கையால் ஆதரவாக என் தோளில் விரல்களைப் பதித்தபடி, "ஆ திறங்கோ...." என்று காஜூவை உதட்டில் உரசினாள்.

வாய் மட்டுமில்லை, உடம்பெல்லாம் இனித்தது. எந்தக் காலத்திலோ ரசித்த பாடல் அட்சரம் பிசகாமல் மனசில் ஓடியது. 'எல்லாம் இன்ப மயம்.. புவிமேல்...,..' உடுமலை நாராயண கவி எடுத்துக் கொடுக்க, எம்எல்வி அற்புதமாய் மனசில் இசைத்தார். உடம்பில் விதவித ராகங்களின் மீட்டல் புல்லரிப்பை ஏற்படுத்தியது..

[தொடரும் ]

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# கேள்வி பதில்கள்

செல்ஃபோனால் நன்மையா, தீமையா?

அதிரா :

1. எப்படியும் வாழலாம் எனச் சிலரும், இப்படித்தான் வாழவேண்டும் எனச் சிலரும் வாழ்கின்றனரே... இதில் எது நல்லதென நினைக்கிறீங்க?

# எப்படியும் வாழலாம் என்பவர் எந்தக் கவலையும் இல்லாதவராகவும், மற்றவர் சிரமப் படுகிறவராகவும் இருந்தால் முடிவு தலைகீழாக இருக்கும்.

& 'வாழ நினைத்தால்' வாழலாம் - என்று அன்றே சொல்லிவிட்டாரே கவிஞர். அதாவது, எல்லோரும் இனிதே வாழ(வேண்டும் என்று) நினைத்தால், நினைப்பவர்கள், அவர்களின் சந்ததியினர் எல்லோரும் நன்றாக வாழ்வார்கள். மற்றவர்கள் ? தனக்கென வாழ்ந்தால் அவருடைய சந்ததியினர் தலையெடுப்பது கடினம்.

2. ஒருவர் நமக்கு நன்மை செய்து கொண்டிருக்கும்வரை, அவரை நல்லவர் வல்லவர் என, உச்சியில் தூக்கிப் பிடிக்கும் சமுதாயம், பின்னாளில் அவரால் இனி நமக்கு நன்மை இல்லை எனும் ஒரு நிலை வரும்போது, பழைசை எல்லாம் மறந்துவிடுகின்றதே... ஏன் மனிதருக்கு இப்படி ஒரு மனநிலை?

# மன்னித்தல் மனித குணமோ இல்லையோ நிச்சயம் மறத்தல் மனித குணம்தான்.

& யாரைச் சொல்கிறீர்கள்? நான் பார்த்த வரை அப்படி யாரும் இல்லையே!

3. இன்று ஒருவர் தன் குடும்பத்தைப் பாதியில் விட்டுவிட்டு, குடி, அல்லது வேறு பாதையில் போனால், அவரைக் கெட்டவர் எனத் திட்டுகின்றனர், ஆனால் அந்நாளில் ஞானி துறவி, நாட்டுக்குத் தியாகம் செய்தோர் என, இன்று நம்மால் போற்றப்படும் பலரும், பாதியில், சிவனே என தம் குடும்பத்தைத் தவிக்கவிட்டுவிட்டுப் போனோர்தானே? ஆனா அவர்களைப் போற்றுகிறோமே? இதுவும் ஒருவித சுயநலம்தானே?

# எத்தனை ஞானிகள் குடும்பத்தைத் தவிக்க விட்டுவிட்டு ஞானத்தைத் தேடினார்கள் ?

எவரது குடும்பம் சிரமத்தை அனுபவித்தது ?

மேலும் பொறுப்பின்றி அலைவது வேறு, மாயை என்றுணர்ந்து ஆன்மஞானம் தேடிச் செல்வது வேறு. டாக்டர் கொலைகாரரர் இல்லை.

& பாவம்! ஏதோ தெரியாமல் செய்துவிட்டார்கள். மன்னித்துவிடுங்கள். (ஆமாம் - ஒன்று கேட்கிறேன், சொல்லுங்க. சுற்றிலும் நாலைந்து மனைவிகள், மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள் புடை சூழ ஒருவர், 'நான் ஞானி ஆகிவிட்டேன். நீங்களும் என் வழியில் நின்று ஆத்ம ஞானம் பெறுங்கள்' என்று சொன்னால் ---- நீங்க என்ன செய்வீர்கள்? )

**கீதா சாம்பசிவம் :**

1. இப்போதைய குழந்தைகளுக்கு அறிமுகமே செல்ஃபோனில் பாட்டுக் கேட்பது, பார்ப்பது, கார்ட்டூன்கள் பார்ப்பது இவை தான்! எனக்குத் தெரிந்து 3, 6 மாசக் குழந்தைகளே பார்க்கின்றன. மோகன் ஜி கூட இதைப் பத்தி எழுதி இருந்தார். இது நல்லதல்ல என்று என் கருத்து! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

# செல் ஃபோன் ஆதிக்கம் மிக அதிகம்தான். அது நல்லதில்லைதான். தவறு "பெரியவர்கள்" தரப்பில்.

& இன்னும் இரண்டு வருடங்களுக்கு, பள்ளிப்பாடங்கள் முழுவதும் செல் ஃபோன் மூலமாகத்தான் என்று ஆகிவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு நாளும் செல் ஃபோனை ஐந்து மணி நேரம் பார்த்தே வகுப்பு அட்டென்ட் செய்த மாணவர்கள் எல்லோரும் அப்புறம் செல்லைப் பார்த்தாலே வெளியே ஓட ஆரம்பித்துவிடுவார்கள்!

2. குழந்தைகள், பெரியவர்கள், அப்பா, அம்மா எல்லோருமே செல்ஃபோனில் மூழ்கி இருப்பது போல் ஒரு வீடியோ வாட்சப்பில் உலா வருகிறது. அவரவர் பிறரைப் பற்றிய நினைவே இல்லாமல் மூழ்கி இருப்பார்கள், சின்னக் குழந்தை உட்பட. அவங்களுக்கெல்லாம் பசி, தாகம்னு வந்தால் என்ன செய்வாங்க?

# செல் ஃபோனில் பீட்ஸா கோக் ஆர்டர் செய்யலாம் !!

3. செல்ஃபோனால் நன்மையா, தீமையா? பட்டியல் கொடுங்க.

# செல்ஃபோன் பிரச்சினைகள் குறித்து இவ்வளவு விவரமாக கேள்வி கேட்டபின் பட்டியல் கேட்பது நியாயமில்லை.

& தீபத்தை வைத்துக்கொண்டு திருக்குறளும் படிக்கலாம், வீட்டையும் எரிக்கலாம். உபயோகிப்பவர் சரியாக இருந்தால் எல்லாம் நன்மையே.

4. யாரைப் பார்த்தாலும் கையில் செல்ஃபோன் இல்லாமல் இருப்பதில்லை. பலரும் மணிக்கணக்காய்ப் பேசவும் செய்கிறார்கள். எனக்கெல்லாம் அப்படி யாரும் பண்ணுவதே இல்லை. நானும் யாருடனும் பேசுவது இல்லை! தப்பு என் மீதா? அல்லது இது சரியானதா?

# செல் இருக்கிறது. பேச பணம் கட்டியாகிவிட்டது. நெருக்கமானவர்களுடன் நிறையப் பேசலாமே. அவர்களும் நம்மை அழைக்கலாம்தான். தவறு இரு பக்கமும்.

& நானும் செல் போனில் நீண்ட நேரம் பேசுவது இல்லை. ஆனால், செல் ஃபோன் - voice typing மூலம் Blog கமெண்ட் செய்வது உண்டு. வாட்ஸ் அப், facebook பார்ப்பது, கமெண்ட் செய்வது உண்டு. amazon மூலம் பொருட்கள் ஆர்டர் செய்வது உண்டு. email பார்ப்பது கூட செல் ஃபோன் வழியில்தான் பெரும்பாலும். wordweb டிக்ஷனரி ஆப் மூலம் ஆங்கில அகராதி அடிக்கடி பார்த்து சில வார்த்தைகளின் அர்த்தங்கள் தெரிந்துகொள்வேன். மொபைல் banking, ஸ்டாக் மார்க்கெட் நிலவரம், ரேடியோ கேட்பது, கால்குலேட்டர் எல்லாமே மொபைல் மூலமே! loneliness போக்குவதற்கு சிறந்த சாதனம் மொபைல் ஃபோன் மட்டுமே!

நெல்லைத் தமிழன்:



**இந்த மாதிரி படங்கள் பார்த்திருக்கேன். அசுரர்கள்னா அழகில்லாத குரூரமானவர்கள், நல்லவங்கன்னா அழகுடையவர்கள் என்ற பொதுப் புத்தி எப்படி உருவாகிறது?**

# சினிமா தாக்கம் தான்.

அரக்கி மாதிரியான நெகடிவ் கேரக்டர்களை அழகான நடிகர் நடிகை செய்தால் ஆடியன்ஸ் சிம்பதி அவர்கள் பக்கம் சாயும் என்ற கோட்பாடு இருக்கிறது.

& அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதால்தான் இப்படி சித்தரித்தார்களோ?

**நகரத்தார் உணவு வகை, பிராமணர்கள் உணவு, சௌராஷ்டிரர்கள்-பட்டுநூல் காரங்க உணவு என்பதுபோல சமூக்க் குழுவிற்கான செய்முறை, உணவுகள் எப்படி உருவாகியிருக்கும்?**

# சிறு குழுக்களாகத்தானே ஆரம்ப கால சமூகம் இருந்தது, எனவே பொருள், தட்பவெப்பம் சார்ந்து சமையல் கலை பரிணமித்திருக்கும்.

**நம் ரசனை பிறருக்கு இல்லை என்பதால் அவர்கள் ரசிப்பவற்றை எள்ளல் நல்ல குணமா?**

# நல்ல ஒன்றை நான் ரசித்தேன். நீங்களும் அதை ரசிக்க அழைக்கிறேன். அதன்றி உன் ரசனை மட்டம் என்று ஒருவர் சொல்வாராயின் இணக்கம் மறைந்து பிணக்கு உருவாகிறது.

& எள்ளல் நல்ல குணமே இல்லை! நீங்க ரசிங்க சார்!! (இப்போ நீங்க ரசிப்பது, லேடஸ்ட் யாரு என்று மட்டும் எனக்கு காதோடு சொல்லிடுங்க.)

**ரசனை ஏன் ஒவ்வொருவருக்கும் மாறுகிறது?**

# லோகோ பின்ன ருசி என்பது மகா சத்யம். அதுதான் வாழ்க்கையில் சுவாரசியத்தை தாங்கி நிறுத்துகிறது.

& எல்லோருக்கும் ஒரே மாதிரி ரசனை என்று ஆகிவிட்டால் போரடிக்கும் சார். ரசனைகள் வெவ்வேறாக இருப்பதுதான் நல்லது.

( காதலிக்க நேரமில்லை ஜோக் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது.

சச்சுவின் அப்பா - நாகேஷிடம் : " தம்பி, நீ சினிமாப் படம் எடுக்கிறேன்னு சொல்லிக்கிட்டு சுத்திகிட்டு இருக்கியே, இது வரைக்கும், என் பொண்ணு மீனலோசனியை, மீனாவை, ஒரு போட்டோ எடுத்திருக்கியா நீ?"

நாகேஷ் : " என்னது? போட்டோவா - அட போய்யா நீயும் உன் ரசனையும்! " )

================

**மின் நிலா தீபாவளி மலர்**
**உங்கள் படைப்புகளை**
engalblog@gmail.com
**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.**
**நன்றி.**

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




LINK : INDIA : https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ




**LINK :**

**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US** : https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK** :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# ஒத்தையா இரட்டையா? இதுவா அதுவா?:: ஸ்ரீராம்

"அதிகம்"

இன்னும் கொஞ்சம் சாதம்? என்றோ, இன்னொரு தோசை? என்றோ கேட்டால் வரும் வேகமான பதில் இதுதான்! நானெல்லாம் 'போதும்' என்றோ, 'வேண்டாம்' என்றோதான் சொல்வேன்!

இரண்டு தோசை சாப்பிட்டதும் வயிறு நிறைந்து விட்டதாம்.

"இன்னொரு தோசை"

"வேணாம்... அதிகம்!"

"அரை தோசை...?"

"சரி சின்னதா ஒண்ணு போடு"

எப்பவும் வார்க்கும் அதே ஒரு கரண்டியில் தோசையின் சைஸ் சின்னதாக்கப்பட்டு வார்த்து போடப்பட்டது.

"போதும்... சரியான அளவு... நான் எப்பவுமே அளவாதான் சாப்பிடுவேன்"

இது இப்போதல்ல, அவ்வப்போது நான் வீட்டில் காணும் காட்சி. தோசை என்றில்லை... சப்பாத்தியும்.

மூன்று சப்பாத்தி சாப்பிட்டதும் சின்னதாய் ஒரு சப்பாத்தி! அதாவது அதே அளவு உருண்டை. அப்பளம் மட்டும் சின்னதாய்.

வீட்டில் எப்போதும் மாவு உருண்டைகள் ஒரே அளவினதாய்த்தான் இருக்கும்!

ஒரு முறை நான் கொஞ்சம் பெரிய சைஸ் அப்பளமாய் இட்டு விட்டேன். "ஹையோ... ரொம்ப அதிகம்... பெரிய சப்பாத்தி! ரெண்டு சாப்பிட்டதுமே வயிறு ரொம்பி ஓவரா போச்சு!" நீண்ட நேரம் திண்டாடிக் கொண்டிருந்தார்.

எடுத்துச் சொல்லி அலுத்து விட்டது. எல்லாத்துக்கும் மனசுதான் காரணம்! இல்லையா!

இதில் இரண்டு விஷயங்கள் நான் கவனித்திருக்கிறேன். போதுமா என்று கேட்டாலோ, இன்னும் வேண்டுமா என்று கேட்டாலோ "ஒரே வார்த்தை, "அதிகம்" என்று மட்டும்தான் வரும்! போதும் என்று அர்த்தம்.

இன்னொரு விஷயம், 'காபி இப்போ ஒரு டோஸ் கொடுக்கவா' என்று கேட்கப்படும்போது "வேண்டாம்" என்று பதில் வரும். ஆனால் சம்பந்தப்பட்ட நபர் அருகில் வந்து டம்ளரை எடுப்பார்! அதாவது வேண்டாம் என்று வாய் சொன்னாலும் வேண்டும் என்று அர்த்தம்! இரட்டை நிலை!

என் பாஸ் கூட இது போல இரட்டை நிலையில் அடிக்கடி பேசுவார்.

"உங்களுக்கு தோசை போட்டுடவா? சப்பாத்தி இல்லை. வேணும்னா மாவு பிசைந்து இடணும்""

"ஓகே.. தோசையே போட்டுடு "

"இல்லை சப்பாத்தியே போட்டுடவா?"

"ஏதாவது ஒண்ணுப்பா..."

"காப்பியா டீயா? காப்பின்னா ஈஸி..

"சரி, காப்பியே கொடு"

"இல்லை, டீ போட்டுடவா... ஒரு நிமிஷம்தான் ஆகும்"

"ஏதோ பண்ணு"

தானும் ஒரு நிலையில் நில்லாமல், எதிராளியையும் குழப்பிக்கொண்டு......!!

====== ====== ======

உங்க அபிப்ராயம் என்ன? கொஞ்சம் சொல்லுங்களேன்....

பொன்னியின் செல்வனைப் படிக்கும்போது வந்தியத்தேவனும், அருண்மொழிவர்மனும், குந்தவையும், வானதியும், நந்தினியும் நினைவுக்கு வருகிறார்கள். கல்கி கவனத்துக்கு வருவதில்லை.

அதே போலதான் சாண்டில்யன், நா பா, போன்ற எழுத்தாளர்களும்.

ஆனால் படிக்கும்போது எழுத்தாளரை நினைக்க வைக்கும் எழுத்தாளர்களில் முதன்மையானவர் சுஜாதா. அப்புறம் பாலகுமாரன். ஏன், தி ஜானகிராமனைக் கூட அப்படிச் சொல்லலாம்.

இதில் எது உசத்தி? அல்லது எது சரி? படிக்கும்போது கதை மாந்தர் நினைவில் இருக்கவேண்டுமா? அதைப் படைத்தவரா?

=============

கைஎழுத்துப் பகுதி!

ஜீவி ஸார்...


ஜீவி

**கீதா அக்கா.. இது பற்றிய விளக்கத்தை கீதா அக்கா கொடுப்பார்கள்.**


உ

ஓம் ஸ்ரீ காருண்யாய, கருடாய,
வேத ரூபாய, வினதா புத்ராய,
விஷ்ணு பக்திப்ரியாய, அம்ருத
கலச ஹஸ்தாய, பஹு பராக்ர
மாய, பக்ஷி ராஜாய, சர்வ வக்ர
நாசகாய, சர்வதோஷ, சர்ப்ப
தோஷ, விஷ சர்ப்ப விநாசகாய
ஸ்வாஹா

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

## கதம்பம் :: ஸ்ரீராம்

ஃபேஸ்புக்கில் ஒரு சிறுகவிதை இருந்தேன். அதற்கு அங்கு துரை செல்வராஜூ ஸார் பதில் சொல்லவில்லை என்றாலும் எனக்கு வாட்ஸாப்பில் கீழ்க்காணும் கவிதையை அனுப்பி இருந்தார். அது இன்னமும் வராததால் சென்று வாரம் தேடியும் இருந்தார். எனவே இன்று நீளமான பதிவாகி விடுமோ என்று தோன்றினாலும் அதையும் பகிர்கிறேன்!

Sriram Balasubramaniam
October 11 at 7:10 PM

நீலவானம்,
பச்சைப் புற்கள்,
படர்ந்த மரம்,
அடர் தனிமை,
இளமஞ்சள் பூக்கள்
கரிய நிழல்...

ஒற்றைப் பாதையில்
பற்றி நடக்க
எண்ண வண்ணங்கள்..



**துரை செல்வராஜூ சார் கவிதை :**

நீலவானம்
பச்சைப் புற்கள்
படர்ந்த மரம்
மஞ்சள் பூக்கள்

**மின்நிலா 024**

கரிய நிழல்...
ஒற்றைப் பாதையில்
பற்றி நடக்க – தமிழ்
பற்றி நடக்க – கரம்
பற்றி நடக்க
ஒற்றைச் சுருளாய்
கற்றைக் குழலாள்...
நெற்றிப் பிறையில்
மின்மினி போல
மின்னும் திலக
முகத்தாள்..
சொல்லும் கவிதை
வரிகளுக் கெல்லாம்..
உயிரைத் தருகிற
நிறத்தாள்.
உயிரினில் புகுந்து
உயிராய் ஆன
அகத்தாள்..
கவிதை இதுவென
காலம் காட்டிய
அகத்தாள்..
வானின் கீழாய்
தோன்றும் கதிராய்
உதித்தாள்..
கடற்கரை மணலில்
காலடித் தடமாய்
கவிஞன் மனதில்
தகித்தாள்..
கனவுகள் இல்லா
கண்களுக் குள்ளே
கற்பனைக் கனியாய்
தித்தித்தாள்..
போதும் கவி

**மின்நிலா 024**

## போதும் என
## புன்னகையில் முகம்
## பதித்தாள்...

**தினமலரிலிருந்து எடுத்த ஒரு சுவாரஸ்யம்!**



தன் பெற்றோர், நடிகர்ராமராஜன் – நடிகை நளினி பற்றி, அவர்களின் வாரிசு, வழக்கறிஞர் அருணா:

அப்பா, அம்மா இருவரும் அதிகம் படிக்கவில்லை. அதனால், நானும், என் தம்பியும், அதிகம் படிக்க வேண்டும் என, அம்மா விரும்பினாங்க. ஆனால், அப்பாவுக்கு, படிப்பு பற்றி பெரிதாக எந்த எண்ணமும் கிடையாது. அவருக்கு, கிராமத்து ஆட்கள் பின்பற்றும் மரியாதை, பழக்க வழக்கங்களை, நாங்கள் பின்பற்ற வேண்டும் என்பது தான் எண்ணம்.

அப்பாவுக்கு, நாங்கள், 'வணக்கம்' என்று தான் சொல்ல வேண்டும் என, விரும்புவார். 'ஹாய், குட்மார்னிங்' என்ற வார்த்தைகள் எல்லாம் வேண்டாம் என்பார். அதுபோல, 'ஆன்டி, அங்கிள்' என்று கூப்பிடக் கூடாது; மச்சான், சித்தி, அத்தை, மாமா, சித்தப்பான்னு தான் கூப்பிடணும் என்பார்.

இத்தனை வயதுக்கு பிறகும், அப்பாவின் வெகுளித்தனம் இன்னும் மாறவில்லை. அப்பாவும், அம்மாவும் எதற்காக பிரிந்தனர் என்பது எங்களுக்கு இன்னும் தெரியாது. எங்கள் முன், அவர்கள் சண்டையிட்டதே இல்லை. இப்போதும் கூட, ஒருவரை மற்றொருவர் தப்பாக பேசுவதே இல்லை. விவாகரத்து வழக்கு, கோர்ட்டில் நடந்து, தீர்ப்பு வழங்கப்பட்ட போது, கோர்ட்டிலேயே அம்மா மயங்கி விழுந்துட்டாங்க. அப்பா தான், ஓடிப் போய் தூக்கி, மயக்கம் தெளிய வைத்துள்ளார். அதைப் பார்த்த நீதிபதி,

ஆச்சரியம் அடைந்துள்ளார். இருவரும் பிரிந்திருந்தாலும், ஒருவரை மற்றொருவர் நினைக்காத நாளே கிடையாது.

'டிவி' யில் அப்பா நடித்த படங்கள், அம்மா நடித்த படங்கள் வந்தபடியே தான் இருக்கும். அதை பார்க்கும் இருவரும், அந்த காட்சிகள் பற்றி, தங்களுக்கு தெரிந்த தகவல்களை, எங்களுடன் பரிமாறிக் கொள்வர். நான் காதலித்து திருமணம் செய்துள்ளது போலவே, தம்பியும், காதலித்து தான் திருமணம் செய்துள்ளான்.

எனினும், பெற்றோர் ஆசிர்வாதங்களுடன், அவர்களின் அனுமதியுடன் தான் திருமணம் செய்து கொண்டுள்ளோம். அப்பா, கார் ஓட்டுவது எனக்கு ரொம்ப பிடிக்கும். மிகவும் நிதானமாக கார் ஓட்டுவார். அவரின் விதவிதமான கலர் சட்டைகள், எனக்கு மிகவும் பிடித்தமானவை. எம். ஜி. ஆர்., போல வாழ வேண்டும் என, ஆசைப்பட்டவர் அப்பா. நிறைய சம்பாதித்தார்; நிறைய பேருக்கு, ஏராளமாக உதவி செய்துள்ளார். எனினும், பணம், சொத்து என, நிறைய சேர்த்து வைக்கவில்லை. அப்பாவும், அம்மாவும் இப்போதும் உழைத்து தான் சாப்பிடுகின்றனர். அம்மாவை யாராவது, நளினின்னு கூப்பிட்டால், இப்பவும் பிடிக்காது. மிசஸ் ராமராஜன்னு சொன்னால், ரொம்ப ஜாலியாக ஆகிடுவாங்க!

==========

## கண்ணதாசனும் புதுமைப்பித்தனும்

மதுரை மாவட்டம் சின்னமனூரில் தமிழ்த் தொண்டர் மாநாட்டில் பெரும் புலவர் திரு சோமசுந்தர பாரதியார், திரு நாரண துரைக் கண்ணன், சைவப் பெரியார் சரவண முதலியார், செந்தமிழ்ச் செல்வர் தேவநேயப் பாவாணர் ஆகியோருடன் மேடையில் பேச ஏற்பட்ட அனுபவத்துக்கு இரண்டு வருடங்களுக்குப் பின் சென்னை முல்லைப் பதிப்பகத்தில் சிறுகதை மன்னர் புதுமைப் பித்தனைச் சந்தித்தேன்.

அப்போது நடந்து கொண்டிருந்த ஒரு பத்திரிகையின் பெயரைச்சொல்லி, "அதை வாங்கி நடத்தலாம் என்றிருக்கிறேன்" என்றேன்.

அதற்கு அவர் கீழ்க் கண்டவாறு சொன்னார்:

"பலகாலம் ஒரு விலைமகள் குடியிருந்த வீட்டில் திடீரென்று ஒரு குடும்பத்தைக் கொண்டுபோய்க் குடிவைத்தால்,. வழக்கமாக வருகிறவன் கதவைத் தட்டாமல் போகமாட்டான். அதுபோல், நடக்கும் பத்திரிகையை வாங்கி, அதில் கிடக்கும் ஊழலில் சிக்கிக் கொள்ளாமல், புதிதாகவே ஒன்றை ஆரம்பி"

இந்த அறிவுரை எனக்குப் பயன்பட்டது.

அந்த நாளில் புதுமைப்பித்தனிடம் ஒரு நண்பர் கடன் வாங்கி இருந்தார். நீண்டநாள் வரை அதைத் திருப்பித் தரவில்லை. அவருக்கு புதுமைப்பித்தன் இப்படி எழுதினார்.

"தம்பிக்கு, நலம். நட்பு என்பது ஒருவழிப் பாதையல்ல. பணத்தைத் திருப்பி அனுப்பவும்."

ஆங்கில எழுத்தாளர்களைவிட தமிழ் எழுத்தாளர்களிடம் நகைச்சுவை அதிகம்.
- கண்ணதாசன், 1970 களில் குமுதத்தில் எழுதியது. -

**பொக்கிஷம் :**


டெலிவிஷன் பேட்டித் தேர்வுக்காக நியமிக்கப்
பட்டுள்ள உறுப்பினர் கமிட்டியில் இடம் பெற்றுள்ள திரு.
திருக்குறள் முனுசாமி, திரு. எம். எஸ். நாடார் (திருச்சி
டியுடோரியல் கல்லூரி), திருமதி சௌந்தரா கைலாசம் ஆகி
யோர் இடைவேளையின்போது 'அஷ்டாவதானம்' செய்வது
எப்படி என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.
எம். எஸ். நாடார் பேச்சின்போது, ''அஷ்டாவதானம் இருக்
கட்டும். நான் சொல்லப்போகும் தமிழ் வாக்கியத்தின்
சிறப்பு என்ன என்பதைப் பற்றிச் சொல்லுங்கள், பார்க்க
லாம்,'' என்று மற்ற இருவரிடமும் கூறினார்.

'பூவாளை நாறுநீ பூமேகலோகமே
பூநீறு நாளை வா பூ—'

—என்ற அந்த வாக்கியத்திற்கு என்ன பொருள் என்று கண்டு
பிடிப்பதிலேயே நேரம் கழிந்தது. திருமதி சௌந்தரா கைலா
சம் மட்டும் வீட்டுக்கு வந்து என்னென்னவோ ஆராய்ச்சிகள்
செய்து கடைசியில் அதன் சிறப்பைக் கண்டுபிடித்தார்!
தலைகீழாகப் படித்தாலும் அதே வாக்கியம்
தான் திரும்ப வரும்.

—பொய்கேரி பி. ராதா

[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்](#)

## பாட்டும் பதமும் :: ஸ்ரீராம்

## கோடு வட்டம் என்பதெல்லாம் கடவுள் போட்டதல்லடி கொள்ளும்போது கொள்ளு தாண்டிச் செல்லும்போது செல்லடி

சென்ற வார "அவள் ஒரு தொடர்கதை" யின் தொடர்ச்சி!

தெலுங்கிலோ, கன்னடத்திலோ இந்தப் படத்தில் திடீர்க் கன்னையா செய்த கண்டக்டர் ரோலை ரஜினி செய்தார் என்று நினைவு. கமல் இந்தப் படத்துக்காக மிமிக்ரி கற்றுக்கொண்டாராம். 'கடவுள் அமைத்து வைத்த மேடை' பாடலில் மிமிக்ரி குரல்கள் கொடுத்த திரு சீனிவாசன் பற்றி இங்கு படிக்கலாம்.



மணிரத்னம் பாராட்டியது கேரக்டர்களின் நிலைத்த தன்மையை. கவிதா போன்ற வேலைக்குச் செல்லும் மிடில் க்ளாஸ் இளம் பெண்களின் சோகக்கதை தன்னை மிகவும் கவர்ந்ததாகச் சொல்லி உள்ளார்.

பாலச்சந்தர் தனது அரங்கேற்றம், மற்றும் மனதில் உறுதி வேண்டும் படங்களிலும் இதே கருவை வெவ்வேறு விதங்களில் கையாண்டிருப்பார் - திறமையான இசை அமைப்பாளர்கள் ஒரே டியூனில் அல்லது ராகத்தில் ரசிகர்கள் இனம் காண முடியாதபடி வெவ்வேறு பாடல்களை படைத்துத் தருவது போல...



அரங்கேற்றம் படத்திலும் கமல் நடித்திருப்பார்!

எல் ஆர் ஈஸ்வரி குரலில் பலப்பல பாடல்கள் எனக்குப் பிடிக்கும். பாலச்சந்தர் படங்களில் எல் ஆர் ஈஸ்வரி குரலில் எனக்கு சட்டென நினைவுக்கு வரும் இரண்டு பாடல்களில் இது ஒன்று. இதே போன்ற அர்த்தம் தொனிக்கும் இன்னொரு பாடல் பாலச்சந்தரின் இன்னொரு படத்தில் உண்டு. அது எங்கள் எஸ் பி பி பாடிய அப்பாடல்! யூகித்திருப்பீர்கள்!



மறுபடியும் கவியரசரைச் சொல்லவேண்டும். "கோடுபோட்டு நிர்க்கச் சொன்னால் சீதை நிற்கவில்லையே... சீதை அங்கு நின்றிருந்தால் ராமன் கதை இல்லையே..." வாழ்க்கை என்பது ஒன்றுமே இல்லை, ஜஸ்ட் உடையும் பலூன்... படாஃபட்!

கவிதாவுக்கு ஏதாவது கவலை என்றால் படாஃபட்தான் கவலை தீர்க்கும் தோழி. ஆனால் அவளின் கொள்கைகளை பார்த்துக் கேட்டு தாண்டிச் செல்வாளே தவிர கவிதாவுக்கு அதில் சம்மதமில்லை. அவ்ளவ் அழி தனி, இவள் வழி தனி!

அடி என்னடி உலகம் இதில் எத்தனை கலகம்..
பந்தம் என்பது சிலந்திவலை
பாசம் என்பது பெருங்கவலை
சொந்தம் என்பது சந்தையடி
இதில் சுற்றம் என்பது மந்தையடி

செக்கு மீது ஏறிக்கொண்டால் சிங்கப்பூரு போகுமா
சேர்ந்தவர்க்கே பாடுபட்டால் பெண்ணின் தேவை தீருமா
கொக்கைப்பார்த்துக் கற்றுக்கொள்ளு வாழ்க்கை என்ன என்பதை
கொத்தும்போது கொத்திக் கொண்டு போகவேண்டும் நல்லதை

படாஃபட்...

கோடுபோட்டு நிற்கச்சொன்னான் சீதை நிற்கவில்லையே
சீதை அங்கு நின்றிருந்தால் ராமன் கதை இல்லையே
கோடு வட்டம் என்பதெல்லாம் கடவுள் போட்டதல்லடி
கொள்ளும்போது கொள்ளு தாண்டிச் செல்லும்போது செல்லடி
படாஃபட்

காதல்போதை என்பதெல்லாம் காமதேவன் கட்டளை
காமதேவன் கட்டளைக்கு காதலர்கள் முத்திரை
பங்குனிக்குப் பின்பு என்ன ஐயமின்றி சித்திரை
பார்ப்பதெல்லாம் பார்க்கவேண்டும் பழமை ஒரு கண்திரை
படாஃபட்..

>>>>> YOUTUBE LINK

கடவுள் அமைத்து வைத்த மேடை பாடலைவிட அதிகமுறை ஒளிபரப்பாகும் பாடல் இனி வரும் பாடல். கே ஜெ யேசுதாஸ் குரலில் தெய்வம் தந்த வீடு... தத்துவத்துக்கு கவையரசருக்குக் கேட்கவா வேண்டும்? ஏற்கெனவே இதில் இன்னும் மூன்று பாடல்களும் அந்த வகையிலேயே மிளிர்பவைதான். இது இன்னும் ஸ்பெஷலாக, முழுக்க முழுக்க தத்துவம்.



பொறுப்பில்லாத அண்ணன்.. கண்டித்து வெளியேற்றும் தங்கை சிடுசிடு கவிதா.. தவிக்கும் அண்ணி, தடுமாறும் தாய்... ரகசியமாக நள்ளிரவில் சோறு திருடும் இந்தக்குழு! கண்டு கண்டிக்கும் கவிதா.. பதிலாக வருகிறது குடிகாரனிடமிருந்து யேசுதாஸ் குரலில் எம் எஸ் வி இசையில் கவியரசரின் வரிகள்...



யேசுதாஸின் கணீரென்ற, அழகான ஹம்மிங்குடன் தொடங்கும் பாடல்..

தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
இந்த ஊரென்ன சொந்த வீடென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன

நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா ஆ..
நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா - இல்லை
என் பிள்ளை எனைக் கேட்டுப் பிறந்தானா
தெய்வம் செய்த பாபம் இது போடி தங்கச்சி
கொன்றால் பாபம் தின்றால் போச்சு இதுதான் என் கட்சி
ஆதி வீடு அந்தம் காடு இதில் நான் என்ன
அடியே நீ என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

வெறும் கோவில் இதிலென்ன அபிஷேகம் உன்
மனமெங்கும் தெருக்கூத்து பகல் வேஷம்
கள்ளிக்கென்ன முள்ளில் வேலி போடி தங்கச்சி
காட்டுக்கேது தோட்டக்காரன் இதுதான் என் கட்சி
கொண்டதென்ன கொடுப்பதென்ன - இதில்

தாயென்ன மணந்த தாரம் என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதையென்ன?

தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம் - அது
தெரியாமல் போனாலே வேதாந்தம்
மண்ணைத் தோண்டித் தண்ணீர் தேடும் அன்புத் தங்கச்சி
என்னைத் தோண்டி ஞானம் கண்டேன் இதுதான் என் கட்சி
உண்மை என்ன பொய்மை என்ன இதில்
தேனென்ன கடிக்கும் தேளென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு...

>>>>> YOUTUBE LINK

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

# நேர்மறை செய்திகள்

மனம் திறக்கிறார் முடிதிருத்தும் தொழிலாளி மாரியப்பன்.



ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடி மக்களிடம் ரேடியோ மூலமாக பேசிவருகிறார்
'மனதின் குரல்' என்ற மக்களின் மனம் கவர்ந்த இந்த நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்ச்சியின் மூலம் தூத்துக்குடி மில்லர்புரத்தில் முடிதிருத்தும் கடையில் நூலகம் வைத்து நடத்தும் பொன்.மாரியப்பனுடன் பேசினார், நூலகப்பணிக்கு தனது மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பானதை அடுத்து பொன்.மாரியப்பனுக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது பல பிரபலங்கள் போன் மூலம் வாழ்த்துக்கூறி வருகின்றனர்.தினமலர் சார்பில் நாம் நமது பாராட்டை தெரிவித்ததுடன், நீங்கள் பிரதமரின் கவனத்தை பெற்றது எப்படி?என்று பேட்டியை போனிலேயே துவங்கினோம்.



அவரோ அடுத்த கேள்வியை நாம் கேட்பதற்கு வாய்ப்பு தராமல் முழுமையாக நடந்த நிகழ்வைப்பற்றி விவரித்தார்.

பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருவது எல்லாம் தூத்துக்குடிதான்.எட்டாவது வரை படித்தேன் அதற்கு பிறகு குடும்ப சூழ்நிலை காரணமாக படிக்க முடியவில்லை.தாத்தா வைத்திருந்த சலூன் கடைக்கு போய் தொழிலை கற்றுக் கொண்டேன்,ஆனாலும் வேறு வேலை செய்வோம் என முடிவு எடுத்து பல தனியார் நிறுவனங்களில் வேலை பார்த்தேன், திருப்தி வரவில்லை சொந்தத் தொழிலையே துவங்குவது என இங்கே கடை வைத்து நடத்திவருகிறேன்.



எனது கடை சின்னக்கடைதான் இரண்டு பேர் உட்கார்ந்து முடிவெட்டலாம் ஆனால் கடையில் நான் மட்டுமே இருக்கிறேன். நானே முதலாளி நானே தொழிலாளி.எனக்கு சிறு வயது முதலே வாசிக்கும் பழக்கம் உண்டு.நேரம் கிடைக்கும் போதெல்லாம் கவிதைகள், தன்னம்பிக்கை கட்டுரைகள், சிறுகதைகள், வரலாறு போன்றவைகளை தேடி தேடி படித்துக் கொண்டிருந்தேன்.

படித்த புத்தகங்களை கொண்டு வந்து சலூனில் போட்டேன் வந்தவர்கள் ஆர்வமாக படித்ததைப் பார்த்ததும் எனக்கும் ஆர்வம் அதிகமாகிவிட்டது.ஐந்து பத்து ஐம்பது நூறு என்று அதிகரித்துக் கொண்டே போய் இப்போது எனது சலூனில் ஆயிரத்து ஐநூறு புத்தகங்கள் உள்ளன.

வாசிக்கும் பழக்கத்தை மாணவர்களிடம் அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு பிடித்த சிறுவர் கதை புத்தகங்கள் நிறைய வாங்கிப் போட்டேன், அந்த புத்தகத்தை படித்துவிட்டு விமர்சனம் எழுதச் சொல்வேன் சிறந்த விமர்சனத்திற்கு புத்தகங்களை பரிசாக கொடுப்பேன் இந்த விஷயம் நிறைய மாணவர்களுக்கு பரவி புத்தகங்களை பரிசாகப் பெறுவதற்காகவே இங்கு வந்து புத்தகங்களை படித்து அது பற்றி எழுத ஆரம்பித்தனர்.

புத்தகங்களை இரவலாக கொடுத்தால் திரும்பி வருவதில்லை என்பதால் யார் வேண்டுமானாலும் இங்கே உட்கார்ந்து எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் படிக்கலாம் ஆனால் வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதியில்லை இதன் காரணமாக பலர் புத்தகங்களில் தாங்கள் படித்த பக்கங்களை குறித்து வைத்துவிட்டுச் சென்று மீண்டும் மீண்டும் வந்து படித்து முடிப்பர்.

இந்த நிலையில்தான் கடந்த வாரத்தில் ஒரு நாள் துாத்துக்குடி வானொலி நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள்.

ஏதாவது புத்தகம் தருவார்கள் போல என்று எண்ணி பையோடு போயிருந்தேன் ஆனால் அவர்களோ முடிதிருத்தும் இடத்தில் நுாலகம் நடத்தும் உங்கள் செயலை பாராட்டி பிரதமர் பேசப்போகிறார் தயராக இருங்கள் என்றனர்.

எனக்கு கையும் ஒடவில்லை காலும் ஒடவில்லை ஒரு இரண்டு மணி நேரம் ஒரே டென்ஷனாக இருந்தது டில்லியில் இருந்து வந்திருந்த ஒரு தமிழ்-இந்தி தெரிந்த ஒரு அதிகாரி என்னுடன் இருந்தார்.

பிரதமர் இந்தியில் பேசுவார் நான் அதை உங்களுக்கு தமிழில் மொழிபெயர்க்கிறேன் நீங்கள் தமிழிலையே பேசுங்கள் நான் அதை இந்தியில் பிரதமருக்கு மொழிபெயர்ப்பேன் என்றார்

ஆனால் அவர் சொன்னதற்கு நேர்மாறான விஷயம் நடந்தது. பிரதமர் லைனில் வந்தார்,' என்ன மாரியப்பன் நல்லா இருக்கீங்களா?' என்று தமிழிலேயே பேசினார் எனக்கு சந்தோஷம் தாளவில்லை மிகவும் நன்றாக இருக்கிறேன் பிரதமரிடம் பேசுவதில் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன் என்றேன் நான் பேசியதை இந்தியில் பிரதமருக்கு மொழி பெயர்க்கப்பட்டது அதன்பிறகு எனக்கு நூலகம் நடத்தும் ஆர்வம் எப்படி வந்தது என்ன புத்தகம் மிகவும் பிடிக்கும் என்றெல்லாம் கேட்டு பாராட்டினார் நான் திருக்குறள் பிடிக்கும் என்று சொன்னதும் பிரதமரே திருக்குறள் பற்றி சில நிமிடம் பெருமையாக பேசினார் .

சில நிமிடங்கள் நீடித்த எங்கள் உரையாடல் எனது நன்றி கூறுதலுடன் முடிந்தாலும் அந்த தருணம் தந்த மகிழ்ச்சி இன்னும் முடியவில்லை நீடித்துக் கொண்டே இருக்கிறது.வியாழக்கிழமை ரிக்கார்டிங் செய்யப்பட்ட இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒலிபரப்பப்பட்டது அப்போது முதல் இப்போது வரை நிறைய பேர் நேரிலும் போனிலும் பாராட்டிக் கொண்டே இருக்கின்றனர்.

பிரதமரின் பாராட்டும் பொதுமக்களின் வாழ்த்தும் எனக்கு இன்னும் உத்வேகத்தை தந்துள்ளது மாணவர்களுக்கு இடையே வாசிப்பு பழக்கத்தை என்னால் முடிந்த அளவு மேலும் வளர்த்தெடுப்பேன் என்று கூறி முடித்த பொன்.மாரியப்பனிடம் நீங்களும் பேசலாம்,

எண்:95971 56246.

-எல்.முருகராஜ்.(தினமலர்)

=====

## பயன்படுத்திய சமையல் எண்ணெயை எரிபொருளாக்கலாம்.

பயன்படுத்திய சமையல் எண்ணெய், உலகெங்கும் பல லட்சம் லிட்டர்கள், தினமும் வீணடிக்கப்படுகின்றன. அதை மறு சுழற்சி செய்ய பல உத்திகள் இருந்தும் இது தொடர்கிறது. இந்த நிலையை மாற்ற, ஆஸ்திரேலியாவின் ஆர்.எம்.ஐ.டி.யை சேர்ந்த விஞ்ஞானிகள் ஒரு புதிய பொருளை உருவாக்கியுள்ளனர்.

இது ஒரே நேரத்தில் கிரியா ஊக்கியாகவும், நுண்வடிகட்டியாகவும், கடற்பஞ்சு போன்ற உறிஞ்சியாகவும் செயல்படுகிறது.இதனால், ஒரு பக்கம் கசடு மிக்க சமையல் எண்ணெயை செலுத்தினால், அது பல்வேறு வேதி வினைகளுக்கு உள்ளாகி, சுத்திகரிக்கப்பட்டு, குறைந்த கரிமச் செறிமானம் கொண்ட உயிரி டீசல் திரவமாக வெளியே வருகிறது.

தற்போது பரிசோதனையில் உள்ள இந்த வித்தியாச மான நேனோ வடிகட்டி, அடுத்து விவசாயக் கழிவுகள், ரப்பர் கழிவு, நுண் பிளாஸ்டிக் கழிவு போன்ற வற்றையும் வடித்தெடுக்கும்படி செய்யலாம் என ஆர்.எம்.ஐ.டியின் ஆராய்ச்சி யாளர்கள் கூறியுள்ளனர்.



======
facebook / Whatsapp post :

அஸ்ஸாம் மாநிலத்தின் தின்சுக்கியா மாவட்டத்தில், சோபிரான் என்னும் 30 வயது இளைஞன், வண்டியில் காய்கறி விற்றுப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு என்று யாரும் கிடையாது. திருமணமும் ஆக வில்லை.

ஒரு நாள், மாலைப் பொழுதில், சோபிரான், தன் காய்கறி வண்டியைத் தள்ளிக் கொண்டு, வீட்டுக்கு வந்து கொண்டிருந்தபோது, சாலை ஓரம் இருந்த ஒரு புதர் நிரம்பிய குப்பை கொட்டும் இடத்தில், குழந்தையின் அழுகுரல் கேட்டுள்ளது. சோபிரான் போய்ப் பார்க்க, அங்கு ஒரு பெண் குழந்தை கிடந்துள்ளது. கொஞ்ச நேரம் அந்தப் பிஞ்சுக் குழந்தையின் பக்கத்தில் இருந்து, “யாராவது குழந்தையை எடுத்துப் போக வருகிறார்களா?” என்று சோபிரான் பார்த்துள்ளான். யாரும் வரவில்லை! குழந்தையைத் தானே எடுத்துக் கொண்டு, வீட்டை அடைந்த சோபிரானுக்கு, அன்று முதல், அக்குழந்தையை வளர்க்கும் ஒரே வேலை தான்!

அதற்கு ஜோதி என்று பெயர் சூட்டினான். ஜோதிக்காக, சோபிரான் திருமணம் செய்து கொள்ளவே இல்லை. காய்கறி விற்பதிலும், ஜோதியைக் கண் கலங்காமல் பார்த்துக் கொள்வதிலுமே, தன் வாழ்நாளை ஓட்டி விட்டான்!

ஜோதி, சோபிரானின் அரவணைப்பில் வளர்ந்தாள். 2013-ல், கணினிப் பாடத்தில் பட்டம் வாங்கினாள். 2014-ல், அஸ்ஸாம் பொது சேவை ஆணையம் நடத்தியத்

தேர்வில் தேறி, இப்போது வருமான வரித் துறையில் , உதவி அதிகாரியாகப் பணி புரிகிறாள். தன்னை வளர்த்த சோபிரானைத் "தாங்கு தாங்கு" என்று தாங்குகிறாள். இன்றைக்கும், சோபிரான், வண்டி தள்ளிக் கொண்டு போய் காய்கறி விற்பதை நிறுத்த வில்லை!

ஜோதி, சோபிரனை, ஓய்வு எடுக்கச் சொல்லிப் பார்த்தாள். அவர கேட்கவில்லை! ஜோதியும் அதைத் தடுக்க வில்லை. சோபிரான் இப்போது தான் பெறாத மகளின் பாசத்தில் கட்டுண்டு கிடக்கிறார். "எனக்குக் கிடைத்தது குப்பையில் கிடந்த பெண் அல்ல; சுரங்கத்தில் இருந்த வைரம்" என்று சோபிரான், ஜோதியை எண்ணி பெருமைப் பட்டுக் கொள்ளுகிறார்!



=====

Dinamalar



19வது முறையாக மதுரையில் யாசகர் ரூ.10 ஆயிரம் நிதி

Facebook post of Rajappa Thanjai : (30.10.2020)




ஜெர்மன் தொழில்நுட்ப மழைநீர் வடிகால் வாரியம் கட்டமைப்பால் நேற்று ஒரே நாளில் பெய்த மழையில் சென்னை வடபழனி ஆலயத்தில் குளத்திற்கு தண்ணீர் கணிசமாக கிடைத்துள்ளது.

சென்னை வடபழனி முருகன் கோவில் அருகே ஜெர்மன் தொழில் நுட்பத்தினால் ஆன மழைநீர் வடிகால் திட்டம் கடந்த மாதம் அமல்படுத்தப்பட்டது. கோவில் நுழைவாயிலில் இருக்கும் 320 மீட்டர் சாலையின் ஓரத்தில் 5 அடி ஆழத்திற்கு பள்ளம் தோண்டி ஜெர்மன் நாட்டு தொழில் நுட்பத்துடன் மழைநீர் ஊடுருவல் வடிகால் திட்டம் அமல்படுத்தப்பட்டது.

கடந்த பத்தாண்டு காலமாக வறண்டிருந்த கோவில் குளத்தில் இதன் மூலம் தண்ணீர் கிடைத்துள்ளது. குளத்தை தூர்வாரி பராமரிப்பு செய்தால் கோவிலை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்பு உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி மழைநீர் சேகரிப்பு துறையின் தலைமை பொறியாளர் நந்தகுமார் கூறியதாவது : ஜெர்மனி, அமெரிக்கா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் நவீன மழைநீர் சேகரிப்பு முறை சோதனை முறையில் சென்னையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஈக்கோ பிளாக் எனும் மக்காத தடிமனான கலன்களில் நான்கு பக்கமும் சிறு துளைகள் இருக்கும். நான்கு அடி உயரம் மற்றும் இரண்டரை அடி அகலம் கொண்ட கலன்களை மக்காத துணியை கொண்டு மூடி பின்னர் பூமிக்கு பத்து அடி ஆழத்தில் பள்ளம் தோண்டி வைக்கப்படுஅதன் மேலே கூழாங்கற்கள், ஜல்லி கற்கள், மணல் போன்றவைகள் கொண்டு நிரப்பப்படும். மழைநீர் இந்த இயற்கை வடிகட்டி அடுக்குகள் வழியாக வடிகட்டப்பட்டு நேரடியாக நிலத்திற்குள் சென்று சுத்தமான தண்ணீராக சேகரிக்கப்படும். அறுபது டன் எடையைக் கூட சாதாரணமாக தாங்கும்

தன்மை கொண்ட இந்த கலன்களை கொண்டு பிரதான சாலைகளுக்கு அடியில் கூட மழை நீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்த முடியும். தற்போது நடைமுறையில் உள்ள உறைகிணறு சேமிப்பு முறையில் மழைநீர் ஒரு வழியாக மட்டுமே நிலத்திற்கு செல்லும் ஆனால் இந்த கலன்களில் நான்கு பக்கமும் துளைகள் உள்ளதால் பூமியின் அடியில் நான்கு பக்கங்கள் வழியாகவும் மழைநீர் செல்லும்.

தற்போது சென்னை பெருநகர் வளர்ச்சி நிதியின் கீழ் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளில் இந்த திட்டத்தை அமல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஜெர்மனி வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், உத்தண்டி, சோழிங்கநல்லூர் பகுதிகளை உள்ளடக்கிய தென்மேற்கு கடற்கரை வடிநிலப்பகுதிகளில் 52 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்படும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டதில் இந்த முறை முழுமையாக செயல்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.





[மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்]

# மைசூர் - ஒரு மாமாங்கத்திற்கு முன்பு !

## பறவைகள் பலவிதம் !



## வெள்ளைப்புள்ளிகளாய் பல பறவைகள்!



படகு சவாரி செய்தபடி அருகே சென்று காணலாம்



துூரப் பார்வை முடித்து, அருகே சென்று விஜாரிக்கலாமா?



## அதோ அங்கே செல்வோம் !



## சண்டையா , சமாதானப் பேச்சா?



## மின்நிலா 024

## மத்தியஸ்தம் செய்து வைக்க வேறு ஒரு சமாதான தூதுவர் லாண்டிங் !



## சண்டை முடிந்தது சமாதானம்!



## மின்நிலா 024

**எல்லோரும் சாப்பிடக் கிளம்பிப் போயிட்டாங்க ! இவர் வீட்டைப் பார்த்துக் கொள்கிறாரோ?**



## அப்படித்தான் இருக்கும் !



பறவைகளையே பார்த்துக்கொண்டு வந்ததால், பக்கத்தில் வந்தவருக்குக் கோபம்!



## 'என் வழி, தனீ வழி' என்று கிளம்பிவிட்டார் !



## எங்கே போனார்?



அப்புறம் என்ன ஆயிற்று ?



பிறகு சொல்கிறேன்!

மீண்டும் முதல் பக்கம் செல்ல இங்கே சொடுக்கவும்

மின்நிலா 024

## உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

engalblog@gmail.com

என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.
எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.

இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,
engalblog@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !


Kgg